# உளர்வன

## reptiles



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | ஊர்வன – தரையின் வல்லுநர்கள்! | 1 |
| 2 | நான்கு முக்கிய வகை ஊர்வன | 2 |
| 3 | ஊர்வன இனங்களின் முக்கிய சிறப்பியல்புகள் | 3 |
| 4 | சுற்றுச்சூழலில் ஊர்வனவற்றின் பங்கு | 9 |

# 1. ஊர்வன – தரையின் வல்லுநர்கள் !

“ஊர்வன” என்பவை தரையில் ஊர்ந்து அல்லது நகர்ந்து செல்லும் விலங்குகள் ஆகும். இவை முதுகெலும்புகள் கொண்டவை. பெரும்பாலும் நிலத்தில் வாழும். ‘ஊர்வன’ என்ற பெயரே அவை நகரும் விதத்தில் இருந்து வந்தது. இவை தங்கள் வயிற்றைத் தரையில் வைத்துச் சறுக்கியோ அல்லது கால்களைப் பயன்படுத்தியோ ஊர்ந்து செல்லும் பழக்கம் உடையவை.



## 2. நான்கு முக்கிய வகை ஊர்வன

| ஊர்வன | விளக்கம் | சான்று |
| --- | --- | --- |
| ஆமைகள் (turtles) | கடினமான ஓடு (Shell) இவற்றின் உடலை மூடியிருக்கும். வேகமாக ஓட முடியாது. | கடல் ஆமை, நில ஆமை. |
| பாம்புகள் (snakes) | கால்கள் இருக்காது. உடலை வளைத்து, நெளிந்து ஊர்ந்து செல்லும். சில விஷம் உள்ளவை. | நாகப்பாம்பு, சாரைப்பாம்பு. |
| பல்லி மற்றும் ஓணான் (lizards) | பெரும்பாலானவை நான்கு கால்கள் கொண்டவை. வேகமாக நகரக்கூடியவை. | வீட்டுப் பல்லி, மரப்பல்லி, ஓணான். |
| முதலைகள் (crocodiles) | மிகப்பெரிய உடலும், வலுவான தாடைகளும் கொண்டவை. அதிக நேரம் நீரிலும், நிலத்திலும் வாழும். | அலிகேட்டர் (alligator). |

# 3. ஊர்வன இனங்களின் முக்கிய சிறப்பியல்புகள்


“ஊர்வன” என்பவை மற்ற விலங்குகளில் இருந்து வேறுபட்டவை. அவற்றிற்கென்றே சில சிறப்பு அம்சங்கள் இருக்கின்றன.

## 1. குளிர் இரத்தம்

இவை குளிர் இரத்தம் கொண்டவை. இவை குளிர் இரத்தப் பிராணிகள் (cold-blooded animals) ஆகும். இதன் பொருள், இவற்றின் உடல் வெப்பநிலை வெளியிலுள்ள சூழ்நிலையைப் பொறுத்து மாறும். அதனால் தான், பாம்பு, ஆமை மற்றும் முதலை குளிராக இருந்தால் அசையாமல் இருக்கும். வெப்பம் தேவைப்படும்போது, சூரிய ஒளியில் படுத்து, (basking). தங்கள் உடலைச் சூடாக்கிக் கொள்ளும்!.







## 2. கடினமான தோல் (செதில்கள்):

இவற்றின் உடல் முழுவதையும் வறண்ட, கடினமான செதில்கள் மூடியிருக்கும். இது ஒரு கவசம் போலச் செயல்படுகிறது. பாலைவனம் போன்ற வறண்ட பகுதிகளில் இருந்து, இவற்றின் உடலில் உள்ள தண்ணீர் வீணாகாமல் தடுக்க இந்தச் செதில்கள் உதவுகின்றன. பாம்புகளின் செதில்கள் அவற்றின் நகர்வுக்கு உதவுகின்றன. முதலைகளின் செதில்கள் கவசம் போல கடினமாக இருக்கும்.








## 3. நிலத்தில் முட்டை:

பெரும்பாலான ஊர்வனவை முட்டையிட்டு குஞ்சுப் பொரிப்பவை. முட்டைகள் பொதுவாகக் கடினமான ஓடு கொண்டிருக்காமல், தோல் போன்ற அமைப்பில் இருக்கும். இதன் காரணமாக அவை ஈரப்பதத்தைத் தக்கவைத்துக் கொள்ள முடியும். சில பாம்புகள் (சில கட்டுவிரியன்கள்) மட்டும் குட்டிகளை ஈனும் திறன் கொண்டவை.

பாம்பு முட்டை





முதலை முட்டை



ஆமை முட்டை

## 4. தோல் உரித்தல்:

சில ஊர்வனவைகள் தங்கள் உடலின் மேல் தோலை உரித்தல், நிறம் மாறுதல், நீண்ட நாள் வாழ்தல் போன்ற சில சிறப்பான பண்புகளையும் கொண்டுள்ளன. இந்தத் தனிப்பட்ட பண்புகள்தான் ஊர்வன உலகெங்கிலும் உள்ள பல்வேறு வகையான வாழ்விடங்களிலும் சூழ்நிலைகளிலும் வாழ உதவுகின்றன.





## 5. உணவுச் சங்கிலி:

இயற்கை சமநிலையில் அனைத்து உயிரினங்களும் ஒரு சங்கிலி போல ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ளது. ஊர்வன இந்தச் சங்கிலியில் இரண்டு முக்கியமான வேலைகளைச் செய்கின்றன. வேட்டையாடிகள் (predator) மற்றும் இரை(prey)யாகச் செயல்படுகின்றன.



❖ பாம்புகள் வயல்களிலும், காடுகளிலும் உள்ள எலிகள், பெருச்சாளிகள் போன்ற கொறித்துண்ணிகளை (rodents) உண்கின்றன.





❖ பல்லிகள் மற்றும் ஓணான்கள் கொசுக்கள், ஈக்கள், பூச்சிகள் மற்றும் சிலந்திகள் போன்ற நோய்களைப் பரப்பும் பூச்சிகளின் எண்ணிக்கையைக் கட்டுக்குள் வைத்திருக்க உதவுகின்றன.



❖ ஊர்வனவை பல விலங்குகளுக்கு முக்கிய உணவாகவும் இருக்கின்றன. முதலை, ஆமை போன்றவைகளின் முட்டைகளை நரி, பருந்து போன்ற பறவைகள் உண்கின்றன.





❖ இவ்வாறு ஊர்வனவை நம்மைச் சுற்றியுள்ள இயற்கைத் தொகுதியை (ecosystem) ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகின்றன.



# 4. சுற்றுச்சூழலில் ஊர்வனவற்றின் பங்கு

ஒவ்வொரு விலங்குக்கும் இயற்கையில் ஒரு வேலை இருக்கிறது. ஊர்வன நம்மைச் சுற்றியுள்ள உலகத்தில் மிக முக்கியமான சில வேலைகளைச் செய்கின்றன.

## 1. பூச்சிக் கட்டுப்பாடு:

சிறிய பல்லிகளும், அரணைகளும் நிறைய பூச்சிகளையும், கொசுக்களையும் சாப்பிடுகின்றன. இதனால், பயிர்களும் செடிகளும் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்கப்படுகின்றன.



## 2. எலிகளைக் கட்டுப்படுத்துதல்:

பாம்புகள் வயல்களிலும் வீடுகளுக்கு அருகிலும் உள்ள எலிகளைப் பிடித்துச் சாப்பிடுகின்றன. இதனால், எலிகள் நம் தானியங்களை வீணாக்குவது தடுக்கப்படுகிறது.



## 3. வேட்டையாடும் சமநிலை:

பெரிய ஊர்வன முதலைகள் மற்றும் உடும்புகள், ஆறுகள் மற்றும் காடுகளில் மற்ற விலங்குகளை வேட்டையாடி, அந்தச் சூழலில் ஆரோக்கியமான சமநிலை இருக்க உதவுகின்றன.



❖ ஊர்வனவற்றின் தோற்றம் பயமுறுத்துவதாகத் தோன்றினாலும், அவை நம் இயற்கையின் ஒரு இன்றியமையாத பகுதியாகும். அவற்றைப் பாதுகாப்பது நமது கடமை!





உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com